Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

STC No.2685/2023

| | | |
|---|---|---|
| | | Prosecution DW-1 |
| Deposition of Witness for | | Defence |
| | | Court |
| Name | : | பால்சுசில் |
| Father’s Name | : | ஆரோக்கியசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 01.08.2024
புகார்தாரர் ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 256 மனு அனுமதிக்கப்பட்டது.
முதல் விசாரணை

1) நான் இந்த வழக்கின் எதிரியாவேன். எனக்கும் இந்த வழக்கின் புகார்தாரர் பால்சாமி என்பவருக்கும் எந்த வித தொடர்பும் கிடையாது வழக்கு பொய் வழக்காகவும், எனக்கும் புகார்தாரருக்கும் இடையே வரவு செலவு கிடையாது. 2020 ம் ஆண்டு சுந்தரராஜ் என்பவர் என்னை அழைத்து சென்று கரூரில் உள்ள பாலதண்டாயுதபானி என்கிற மணி எனும் பைனான்சியரிடம் அறிமுகப்படுத்தி வைத்தார். நான் அவரிடம் ரூ.2 லட்சம் கடன் பெறுவதற்காக அவரிடம் கேட்டுக்கொண்டு அவர் சொல்லிய படி எனது இரண்டு

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர். (FAC)

காசோலையையும் ஒரு கடனுறுதி சீட்டையும் கொடுத்தேன். ஆனால் எனக்கு அவர் கடன் தரவில்லை. நான் எனது சொந்த ஊரான திண்டுக்கல்லுக்கு சென்றுவிட்டேன் பின்னர் அவரிடம் போன் செய்து எப்போது எனது வங்கி கணக்கிற்கு ரூ.2 இலட்சம் போடுகிறீர்கள் என்று கேட்டதற்கு இரண்டு நாட்கள் கால அவகாசம் கேட்டார்.

2) இரண்டு நாட்கள் கழித்து அவருக்கு நான் போன் செய்தபோது அவர் போனை எடுக்க வில்லை. பின்னர் அவரை எனக்கு அறிமுகப்படுத்தி வைத்த சுந்தரராஜன் என்பவருக்கு நான் போன் செய்தபோது அவரும் போன் எடுக்கவில்லை. இரண்டு நாட்கள் கழித்து சுந்தரராஜன் எனது வாட்சப் மூலமாக “Mani will give money in the week time” என்று குறுஞ்செய்தி அனுப்பினார். அதன் பிறகு சுந்தரராசும் போன் எடுக்கவில்லை மணி என்பவரும் போன் எடுக்கவில்லை. பிறகு 10 நாட்கள் கழித்து மணிக்கு போன் செய்து கேட்டபோது அவர் எனது காசோலைகளை சுந்ததரராஜன் வாங்கிக் கொண்டு சென்று விட்டார் என்று கூறினார்.

3) நான் அவரிடம் உங்களிடம் தான் காசோலையையும் கடனுறுதி சீட்டையும் கொடுத்திருந்த நிலையில் எவ்வாறு என்னை கேட்காமல் அவற்றை சுந்தரராஜனிடம் கொடுக்கலாம் என்று கேட்டேன். அதற்கு அவர் பதில் சொல்லாமல் போனை கட் செய்து விட்டார். பிறகு சுந்தரராஜனுக்கு போன் செய்த போது அவர் எடுக்க வில்லை. பின்னர் நான் சுந்தரராஜன் வாட்சப் நம்பருக்கு " you are Blackmailing me it is the criminal offence என்று சொல்லி குறுஞ்செய்தி அனுப்பினேன்.

4) அதற்கு அவர் எந்த பதிலும் அனுப்ப வில்லை. இந்நிலையில் எனக்கு பால்சாமி என்பவரிடம் இருந்து ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்று வந்தது. அதனை நான் வாங்கி படித்தபோது நான் பால்சாமியிடம் கடன் வாங்கியதாகவும், அதற்கு ஈடாக காசோலை கொடுத்தாகவும், அந்த காசோலை வசூல் ஆகாமல் திருப்பட்டுவிட்டதாகவும் கூறப்பட்டிருந்தது. நான் அதனை பார்த்து அதிர்ச்சி அடைந்து எனது வழக்கறிஞரிடம் ஆலோசனை செய்தேன். அவரது ஆலோசனை படி நான் இரண்டு காசோலைகள் கொடுத்திருந்த நிலையில் ஒரு காசோலை மட்டுமே திருப்பட்டுவிட்டதாக வழக்கறிஞர் அறிவிப்பு வந்ததால் மற்றொரு காசோலையை கொடுத்து எனது வங்கியில் உடனடியாக மனு கொடுத்து எ stop payment செய்ய கோரினேன்.

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர். (FAC)

5) அதன்படி மற்றொரு காசோலை stop payment செய்யப்பட்டுவிட்டது. அதன் பிறகு எனது வழக்கறிஞர் மூலமாக பால்சாமி என்பவரின் வழக்கறிஞருக்கு பதில் அறிவிப்பு அனுப்பினேன். எனது மேற்படி காசோலையை சுந்தரராஜன் என்பவர் தான் மோசடி செய்து பால்சாமி என்பவர் மூலமாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் பால்சாமியிடம் எந்த கடன் தொகையையும் வாங்கவும் இல்லை வழக்கு காசோலைக்கு ஈடாக கொடுக்கவும் இல்லை. எனவே இவ்வழக்கினை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க முதல் விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d-S.P.Barathkumar

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர். (FAC)